**ஆகஸ்ட் – 11**

# TNPSC துளிகள்


- அருணாச்சல பிரதேச மலைகளில் மலையேறும் வீரரான கபக் யானோ தனது ஏழு மலையேறுதல் பயணத்தின் ஒரு பகுதியாக கிளிமஞ்சாரோ மலையை வெற்றிகரமாக ஏறியுள்ளார்.
- மால்டோவா குடியரசு ஆனது, சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியில் அதன் 107வது உறுப்பினராக இணைந்துள்ளது.
- உணவுப் பாதுகாப்பிற்கான உலகளாவியப் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் உணவு மற்றும் அமைதிக்கான M.S. சுவாமிநாதன் விருதை இந்தியப் பிரதமர் அறிமுகப் படுத்தியுள்ளார்.
    - நைஜீரிய நாட்டின் அறிவியலாளர் டாக்டர் அரேனாரே கடும் பட்டினி நிலையைக் குறைப்பதற்கான தனது முன்னெடுப்புகளுக்காக இந்த விருதைப் பெறும் முதல் நபராவார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## சரஸ்வதி மஹால் நூலகம்

- தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த நூலகமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இந்த நூலகமானது, தற்போது 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலக விதிகளின் கீழ் உதவி பெறும் நூலகமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அரண்மனை நூலகத்தின் நூல் இருப்புகள்/சேகரிப்புகளின் தொடக்கமானது, பதினாறாம் நூற்றாண்டில் பொது சகாப்தம் (கி.பி) 1535 ஆம் ஆண்டு முதல் 1675 ஆம் ஆண்டு வரையிலான தஞ்சாவூர் நாயக்கர் ஆட்சியாளர்களின் கீழ் தொடங்கப் பட்டதாக நம்பப்படுகிறது.
- மராட்டிய ஆட்சியாளர்கள் பின்னர் கி.பி 1798 ஆம் ஆண்டு முதல் 1832 ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்த இரண்டாம் இராஜா சரபோஜியின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளுடன் அந்த நூல் இருப்பினை விரிவுபடுத்தினர்.
- இரண்டாம் இராஜா சரபோஜி, அந்த நூலகத்திற்காக பல புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை வாங்கிய பிரபல புத்தகப் பிரியர் ஆக அறியப்படுகிறார்.
- இந்த நூலகமானது, வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சாவூர் அரண்மனைக்குள் அமைந்து உள்ளது.
- இது எண்பத்தி ஒராயிரத்து நானூறுக்கும் மேற்பட்டப் புத்தகங்களையும் நாற்பத்தேழாயிரத்து ஐநூறு பனை ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் /கையெழுத்துப் பிரதிகளையும் கொண்டுள்ளது.
- இராஜாவின் தனிப்பட்ட புத்தகச் சேகரிப்பில் நான்காயிரத்து ஐநூற்று முப்பது புத்தகங்கள் உள்ளன.
- கையெழுத்துப் பிரதிகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் இத்தாலிய மொழிகளில் உள்ளன.
- பனை ஓலைகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களில் கிரந்தம், தேவநாகரி, நந்தி நாகரி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஒடியா ஆகியவை அடங்கும்.

- தமிழ் மொழித் தொகுப்பில் சைவ, வைணவ மற்றும் சமண சமயப் படைப்புகள், அரிய மருத்துவ நூல்கள் ஆகியவை அடங்கும்.
- சரஸ்வதி மஹால் நூலகம் என்பது உலகின் மிகப்பெரிய கிழக்கத்திய/ஓரியண்டல் கையெழுத்துப் பிரதி நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது ஆசியாவின் பழமையான நூலகங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.




## புதிய பள்ளிக் கல்விக் கொள்கை 2025




- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்விக் கொள்கையை வெளியிட்டார்.
- இந்தக் கொள்கையானது, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியை மட்டுமே அனுமதித்து, இருமொழி கொள்கை முறையினை மீண்டும் வலியுறுத்துகிறது.
- இது மனப்பாடம் செய்யும் கல்வி முறைக்குப் பதிலாக ஆக்கப்பூர்வமான கற்றலை ஊக்குவிப்பதோடு, கல்விக் கற்றலை உடல் பயிற்சியுடன் ஒருங்கிணைக்கிறது என்பதோடு மேலும், தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்ட நீதிபதி D. முருகேசன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தக் கொள்கை உருவாக்கப்பட்டது.
- கல்வியாண்டின் ஜூலை 31 ஆம் தேதிக்குள் ஒரு சிறார் ஐந்து வயதினை நிறைவு செய்தால் மட்டுமே, 1 ஆம் வகுப்பிலிருந்து முறையான பள்ளிப்படிப்பு தொடங்கும்.
- இந்த ஆண்டு முதல் 11 ஆம் வகுப்புக்கான பொது/வாரியத் தேர்வு நீக்கப்பட்டுள்ளது என்பதோடு மேலும் நூறு சதவீத மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர வேண்டும் என்பதே இதன் குறிக்கோள் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## கடலோரக் கப்பல் போக்குவரத்து மசோதா 2025




- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று, மாநிலங்களவையானது 2025 ஆம் ஆண்டு கடலோரக் கப்பல் போக்குவரத்து மசோதாவினை நிறைவேற்றியது.
- இந்த மசோதா இந்தியாவின் கடலோரக் கப்பல் போக்குவரத்தை நவீன மயம் ஆக்குவதையும், அதன் 11,098 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையின் திறனைத் வெளிக் கொணர்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தின் XIV ஆம் பகுதிக்கு மாற்றாக அமைகிறது என்பதோடு மேலும் உலகளாவியக் கடற்கரை வணிக விதிமுறைகளுடன் ஒத்துப் போகிறது.
- இந்த மசோதா, கடலோர வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டு கப்பல்களுக்கு உரிமம் வழங்குவதை எளிதாக்குகிறது மற்றும் ஒழுங்குபடுத்துகிறது.
- மேலும், 2030 ஆம் ஆண்டிற்குள் கடலோர சரக்குப் போக்குவரத்துகளை 230 மில்லியன் மெட்ரிக் டன்களாக உயர்த்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு தேசியக் கடலோர மற்றும் உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து உத்திசார் திட்டத்தை உருவாக்குவதை வலியுறுத்துகிறது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக நிகழ்நேரக் கப்பல் தரவுகளுக்கான தேசியத் தரவுத் தளத்தினை இந்த மசோதா உருவாக்குகிறது.

- இந்த மசோதாவானது, 2025 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் மசோதா மற்றும் 2025 ஆம் ஆண்டு கடல் வழியாக சரக்குகளை எடுத்துச் செல்வதற்கான மசோதா ஆகியவற்றுடன் சேர்ந்து, முக்கிய கடல்சார் சீர்திருத்தங்களை நிறைவு செய்கிறது.

## SHINE முன்னெடுப்பு

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது, இளம் மாணாக்கர்கள் சுகாதாரம் மற்றும் உயிரி மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக SHINE நிகழ்ச்சியினை (அடுத்தத் தலைமுறை ஆய்வாளர்களுக்கான அறிவியல் மற்றும் சுகாதாரப் புத்தாக்கம்) நடத்தியது.
- திப்ருகரில் உள்ள ICMR-RMRCNE மற்றும் கும்ல்வங் எனுமிடத்தில் உள்ள MRHRU ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அசாம் மற்றும் திரிபுராவைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.
- இந்த நிகழ்வானது 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணாக்கர்களை இலக்காகக் கொண்டு, ஆய்வகச் சுற்றுப்பயணங்கள், அறிவியல் கண்காட்சிகள், வினாடி வினாக்கள், செயல் விளக்கங்கள் மற்றும் ஊடாடும் அமர்வுகள் ஆகியவை நடத்தப் பட்டன.
- டாக்டர் கியூரியோ என்ற உருவச் சின்னம் ஆனது, சிக்கலான அறிவியல் தலைப்புகளை எளிமைப்படுத்த உதவியது மற்றும் மாணாக்கர்களுக்குக் கற்றலை ஈடுபாட்டுடன் கூடியதாக மாற்றியது.
- இந்த முன்னெடுப்பானது, 2047 ஆம் ஆண்டிற்குள் விக்ஸித் பாரதம்/ புதிய இந்தியா என்ற இந்தியாவின் தொலைநோக்கு கொள்கையுடன் ஒத்துப் போகிறது மற்றும் மாணாக்கர்களை அறிவியல் மற்றும் பொது சுகாதாரத்தில் தொழில் முறை வாழ்க்கை நோக்கி வழி நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




ICMR's SHINE Initiative engages school students nationwide with interactive activities, lab visits, and expert talks to spark interest in biomedical research.

## பாரத் வாடகை வாகனச் சேவை

- இந்தியாவின் கூட்டுறவுத் துறையின் கீழ் பாரத் என்ற புதிய வாடகை வாகனச் சேவையானது 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொடங்கப்படும்.
- இந்தச் சேவையானது 300 கோடி ரூபாய் மதிப்பிலான அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் எட்டு பெரிய கூட்டுறவு நிறுவனங்களால் ஆதரிக்கப்படுகிறது.

- இது பல்நிலை சஹாகரி டாக்ஸி கூட்டுறவு லிமிடெட் நிறுவனம் மூலம் தொடங்கப் படுகிறது.
- இதன் முக்கிய உறுப்பினர்களில் இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO), குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (GCMMF) மற்றும் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) ஆகியவை அடங்கும்.
- ஓட்டுநர்களுக்கு மிகச் சிறந்த வருமானத்தை வழங்குவதும், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் மலிவு விலையிலான சவாரிகளை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.




## சர்வதேசச் செய்திகள்

### ரஷ்யா மற்றும் INF ஒப்பந்தம்




- 1987 ஆம் ஆண்டு நடுத்தர தூர தாக்குதல் வரம்புடைய அணுசக்திப் படைகள் (INF) ஒப்பந்தத்திற்கான தனது உறுதிப்பாட்டை ரஷ்யா அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டு வந்தது.

- பிலிப்பைன்ஸ் நாட்டில் அமெரிக்கா டைஃபோன் ஏறிகணை அமைப்பை நிலை நிறுத்தியதும், ரஷ்ய கடற்கரைகளுக்கு அருகில் இரண்டு அணு ஆயுதத் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை மீண்டும் நிலைப்படுத்தியதும் இதற்காக குறிப்பிடப் பட்ட காரணங்கள் ஆகும்.
- INF ஒப்பந்தம் ஆனது 1987 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கு இடையில் கையெழுத்தானது.
- இது 500 முதல் 5,500 கிமீ வரையிலான தாக்குதல் வரம்புகளைக் கொண்ட நிலத்தில் இருந்து ஏவப்படும் உந்துவிசை மற்றும் சீர்வேக எறிகணைகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒட்டுமொத்த அணு ஆயுதங்களையும் அகற்றுவதற்கான முதல் பெரிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமாகும், மேலும் இது களம்சார் ஆய்வுகளையும் உள்ளடக்கியது.
- 2019 ஆம் ஆண்டில் அமெரிக்கா அதிகாரப் பூர்வமாக விலகியதும் இந்த ஒப்பந்தம் பலவீனமடைந்து விட்டது.

## சர்வதேசக் கடற்படுகை ஆணையத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவு





- சர்வதேசக் கடற்படுகை ஆணையம் (ISA) ஆனது, அதன் 30வது சட்டமன்ற அமர்வை 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று நிறைவு செய்தது.
- ஐக்கிய நாடுகளின் கடல் சட்டம் தொடர்பான உடன்படிக்கையின் (UNCLOS) கீழ் ISA உருவாக்கப்பட்டதன் 30 ஆம் ஆண்டு நிறைவை குறிக்கும் விதமாக இந்த அமர்வு நடத்தப் பட்டது.
- நிலைத்தன்மை மற்றும் நியாயமான பலன் பகிர்வை ஆதரிப்பதற்காக ISA ஒரு பொதுவான பாரம்பரிய நிதி தொடர்பான பணிகளை முன்னெடுத்தது.
- கடற்படுகைச் சுரங்கத்தின் தாக்கங்களை மதிப்பிடுவதற்காக ஒரு பொருளாதாரத் திட்டமிடல் ஆணையம் செயல்பாட்டுக்கு வந்தது.
- நவம்பர் 01 ஆம் தேதியானது, அதிகாரப்பூர்வமாக சர்வதேச ஆழ்கடல் தள தினமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ISA ஆனது, உலகின் 54% பெருங்கடல்களை உள்ளடக்கிய தேசிய எல்லைகளுக்கு அப்பால் உள்ள கடற்படுகை சார்ந்த கனிம வளங்களை நிர்வகிக்கிறது.

## தைவான் மறு வாக்கெடுப்பு

- கோமிண்டாங் கட்சியைச் சேர்ந்த 24 எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்,

ஜனநாயக முற்போக்குக் கட்சி மற்றும் புளூபேர்ட் இயக்கத்தின் ஆதரவுடன் மறு வாக்கெடுப்பில் இருந்து தப்பினர்.

- ❖ எதிர்க்கட்சியானது சீனாவுடன் கூட்டணி வைத்து அரசியலமைப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் சட்டங்களை இயற்றியதாக எழுந்த குற்றச்சாட்டுகளால் இந்த மறு வாக்கெடுப்புத் தூண்டப்பட்டது.
- ❖ 2024 ஆம் ஆண்டு தேர்தல்களில் தோல்வியடைந்த பின்னர், 113 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்ற யுவானில் பெரும்பான்மையை மீண்டும் பெறுவதற்காக ஜனநாயக முற்போக்குக் கட்சி ஆறு இடங்களை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இருந்தது.
- ❖ அரசியல் பதட்டங்கள் அதிகமாக இருப்பதால், மேலும் ஏழு கோமிண்டாங் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இரண்டாவது சுற்று மறு வாக்களிப்பு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ மறு வாக்களிப்புச் சட்டம் என்பது அரிதாகவே பயன்படுத்தப்படும் அரசியலமைப்பு செயற்கருவியாகும் என்பதோடு இது குடிமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளை பதவி நீக்க வழிவகுக்கிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புற்றுநோயை உண்டாக்கும் ஹெபடைடிஸ் D

- ❖ உலக சுகாதார அமைப்பானது, அதிகாரப்பூர்வமாக ஹெபடைடிஸ் டி வைரஸ் (HDV) புற்றுநோயை உண்டாக்கக் கூடியதாக வகைப்படுத்தியுள்ளது.
- ❖ ஹெபடைடிஸ் D ஆனது, ஹெபடைடிஸ் B வைரஸ் (HBV) நகலெடுக்க தேவைப்படுகிறது மற்றும் கல்லீரல் புற்றுநோய் பாதிப்பின் அபாயத்தை HBV வைரசை விட இரண்டு முதல் ஆறு மடங்கு அதிகமாக அதிகரிக்கிறது.
- ❖ ஹெபடைடிஸ் D பாதிப்புள்ள நோயாளிகளில் சுமார் 75 சதவீதம் பேரில் 15 ஆண்டுகளுக்குள் கல்லீரல் சிரோசிஸ் எனும் பாதிப்பு உருவாகும்.
- ❖ ஹெபடைடிஸ் B மற்றும் D ஆகியவற்றின் கூட்டுத் தொற்று ஆனது ஹெபடைடிஸ் B பாதிப்பினை விட கடுமையான கல்லீரல் நோய்க்கு வழிவகுக்கிறது.
- ❖ அனைவருக்குமான ஹெபடைடிஸ் B தடுப்பூசியானது மறைமுகமாக ஹெபடைடிஸ் D பாதிப்பினைத் தடுக்கக் கூடியது, ஆனால் இந்தியாவில் உள்ள தற்போதைய தடுப்பூசி வழங்கீடு சுமார் 50 சதவீதமாக குறைவாகவே உள்ளது.

- இந்த புற்றுநோய் வகைப்பாடு HDV தொடர்பான கல்லீரல் புற்றுநோய்க்கான ஆராய்ச்சி மற்றும் உலகளாவியக் கண்காணிப்புக்கான நிதியை அதிகரிக்கும் என்று WHO எதிர்பார்க்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய மழைப்பாம்பு இனங்கள்




- உடலில் குறுகிய பட்டைகளுடன் கூடிய மழைப் பாம்பு என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வகை மழைப் பாம்பு இனமானது, மிசோரமின் வெப்பமண்டல காடுகளில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த இனத்திற்கு ஸ்மிதோபிஸ் லெப்டோபாசியாட்டஸ் என்று அறிவியல் பூர்வமாக பெயரிடப்பட்டுள்ளது.
- இது ஸ்மிதோபிஸ் இனத்தில் ஸ்மிதோபிஸ் அட்டெம்போரலிஸ் மற்றும் ஸ்மிதோபிஸ் மிசோரமென்சிஸ் ஆகியவற்றிற்குப் பிறகு கண்டறியப்பட்ட மூன்றாவது இனமாகும்.
- இந்தப் பாம்பு இனமானது, பகுதியளவு நீரில் வாழும் நீர்வாழ் உயிரினமாகவும், இரவில் நடமாடும் தன்மையுடனும், சுமார் 900 முதல் 1200 மீட்டர் உயரத்திற்கு இடைப்பட்ட நீரோடைகளுக்கு அருகிலுள்ள ஈரப்பதமான காடுகளில் வாழ்கிறது.

- இந்த இனத்திற்கு முன்மொழியப்பட்ட மிசோ பெயர் ருவாருல் என்பதாகும்.


# மாநிலச் செய்திகள்

## நிஜுத் மொய்னா 2.0'




- அசாம் மாநில அரசானது, உயர்கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்க முக்கிய மந்திரி நிஜுத் மொய்னா 2.0 திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திட்டமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களில் உயர்நிலை (HS) முதல் முதுகலை (PG) நிலை வரை பயிலும் பெண் மாணாக்கர்களுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்குகிறது.
- இந்தத் திட்டமானது மிகவும் அனைவருக்குமானது மற்றும் வருமானத்தைப் பொருட் படுத்தாமல் அனைத்து குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் பொருந்தும்.

## சாய்ராங் இரயில் பாதை





- புதிதாக தொடங்கப்பட்ட 51.38 கி.மீ பைராபி-சாய்ராங் இரயில் பாதையானது,

மிசோரமின் தலைநகரான ஐஸ்வாலுக்கு 18 கி.மீ தொலைவில் இரயில் போக்குவரத்து இணைப்பை வழங்குகிறது.

- 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த இரயில் பாதையில், 48 சுரங்கப்பாதைகள் மற்றும் 142 பாலங்கள் உள்ளன.
- கலாதன் பல் நோக்கு போக்குவரத்துத் திட்டத்தின் கீழ், இந்தியாவினால் நிதி அளிக்கப்படும் மியான்மரின் சிட்வே துறைமுகத்திற்கு சாய்ராங் ஒரு முக்கிய இணைப்பாகச் செயல்படக்கூடும்.
- மியான்மரில் நிலவும் உள்நாட்டு அமைதியின்மை மற்றும் வங்காளதேசத்தில் நிலவும் அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவை அகர்தலா-அகௌரா மற்றும் இம்பால்-மோரே இரயில் சேவை இணைப்புகள் உள்ளிட்ட எல்லை தாண்டிய இணைப்பை தாமதப்படுத்தியுள்ளன.

## Ni–Cu–PGE கனிம மண்டலம்

- சத்தீஸ்கரின் மகாசமுந்த் மாவட்டத்தின் பாலுகோனா-ஜம்னிதி தொகுதியில் நிக்கல்–செம்பு–பிளாட்டினம் குழு கனிமக் கூறுகளின் (Ni–Cu–PGE) சல்பைடு என்ற கனிமமய மாக்கலின் குறிப்பிடத் தக்க கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 300 மீட்டர் ஆழம் வரையிலான சல்பைடு படிவுகளைக் கொண்ட 700 மீட்டர் கனிமமய மாக்கப்பட்ட மண்டலம் இங்கு கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்புடன் சேர்ந்து, வேதாந்தா குழுமத்திற்குச் சொந்தமான கெல்வர்தப்ரி Ni–Cu–PGE தொகுதி, மகாசமுந்தை ஒரு முக்கியமான கனிம மையமாக மாற்றுகிறது.




# இதரச் செய்திகள்

## மாபெரும் மின்னல் ஒளிர்வு

- 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், டெக்சாஸ் முதல் கன்சாஸ் வரையிலான பகுதிகளில் வானத்தை ஒளிரச் செய்த ஒரு பெரிய மின்னல் உலகின் மிக நீளமான மின்னல் ஒளிர்வாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இது வட அமெரிக்காவின் மாபெரும் சமவெளிகளில் 829 கிலோமீட்டர் (515 மைல்) வரை நீண்டுள்ளது.
- இந்த மின்னல் ஆனது, மேகங்களிலிருந்து நிலத்திற்கு கடத்தப்படும் நூற்றுக்

கணக்கான மின்னூட்டங்களை உருவாக்கக்கூடிய தொடர்ச்சியான நீண்ட கிடைமட்ட மின்னல் நிகழ்வாகும்.

- இது போன்ற முந்தையப் பதிவானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், தெற்கு அமெரிக்கா மற்றும் மெக்சிகோ வளைகுடா பகுதிகளில் 477 மைல்கள் வரையில் ஏற்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மாபெரும் மின்னல் நிகழ்வு ஆனது, 7 வினாடிகளுக்கு மேல் நீடித்தது, அதே நேரத்தில் மிக நீண்ட கால மின்னல் நிகழ்வு பதிவு 2020 ஆம் ஆண்டில் அர்ஜென்டினா மற்றும் உருகுவே பகுதியில் சுமார் 17 வினாடிகள் நீடித்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★